செய்தி வெளியீடு எண். 35-2019 நாள்: 21.02.2019

# விழுப்புரம் மாவட்டத்தில் 23.02.2019 மற்றும் 24.02.2019 அன்று வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு சிறப்பு முகாம் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

****

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 2019 நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது தொடர்பாக விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் தொடர் திருத்தப்பணியின் கீழ் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள வாக்குச்சாவடி அமைவிடங்களில் வருகின்ற 23.02.2019 (சனிக்கிழமை) மற்றும் 24.02.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு நாட்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் தொடர்பாக சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்ப்பதற்கு விரும்பும் வாக்காளர்கள் படிவம் 6, பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7, வெளிநாட்டில் வசிப்பவர்கள் பெயர் சேர்ப்பதற்கு படிவம் 6A, பெயர், வயது, பாலினம், உறவுமுறை முதலிய பதிவுகளில் திருத்தம் ஆகியவைகளுக்கு படிவம் 8, ஒரு சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே வாக்காளர்களின் வசிப்பிடம் மாறியிருந்தால் படிவம் 8A ஆகியவை தொடர்பான கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி நிர்ணய அலுவலர் (DLO) மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் (BLO) காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை உரிய படிவத்தில் கோரிக்கை மனுக்கள் வாக்காளர்கள் கொடுத்துக்கொள்ளலாம்.

மேலும் படிவம் 6ல் பெயர் சேர்த்தலுக்கான படிவத்துடன் வயதிற்கான ஆதாரமாக பிறப்பு சான்று அல்லது கல்லூரி, பள்ளி மாற்றுச்சான்றிதழ், ஆதார் அட்டை, இருப்பிடத்திற்கு ஆதாரமாக குடும்ப அட்டை நகல் அல்லது இருப்பிடத்தை குறிக்கும் அஞ்சல் உள்ள ஓட்டுநர் உரிமம், வங்கி கணக்கு புத்தகம் நகல் இவைகளின் ஏதேனும் ஒரு ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். விடுபட்ட வாக்காளர்கள் குறிப்பாக 01.01.2019 அன்று 18 வயது நிறைவடைந்த அனைவரும் தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்து கொள்ள இந்த வாய்ப்பினை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.